திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மாண்புமிகு அமைச்சர் அவர்கள் பதில் சொல்கிற நேரத்தில் கோவை, மதுரை ஆகிய நகரங்களில் பணியாற்றும் அரசுப் பணியாளர்களுக்கு நகர ஈட்டுப்படி, வாடகைப்படி அதிகரிப்பது சம்பந்தமாகப் பரிசீலனையில் இருப்பதாகச் சொன்னார்கள். கோவை, மதுரை ஆகிய நகரங்களை மாநகராட்சி என்று அறிவித்து—கோவையைப் பொறுத்தவரையில் மூன்று ஆண்டுகள் ஆகிறது, மதுரையை மாநகராட்சியாக்கி எத்தனையோ ஆண்டுகள் ஆகிவிட்டது—பல்லாண்டுகள் ஆகிய பின்னரும், இதுவரையில் அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய நகர ஈட்டுப்படி கொடுக்காத காரணத்தால் அவர்கள் இழப்புக்கு ஆளாகியிருக்கிறார்கள். ஆகவே, அரசாங்கம் உடனடியாக இதைப் பரிசீலித்து, அவர்களுக்குக் கொடுக்க வேண்டிய வீட்டு வாடகைப்படி, நகர ஈட்டுப்படி ஆகியவற்றை உடனடியாகக் கொடுப்பதற்கு முன்வருமா என்று அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : பேரவைத் தலைவர் அவர்களே, நாம் மாநகராட்சி மன்றமாக அவைகளை ஆக்கினாலும், மத்திய அரசு அந்த நகரங்களை எந்தப் பிரிவில் சேர்த்து வைத்து இருக்கிறார்களோ அந்தப் பிரிவின் அடிப்படையில்—அதாவது ஏ, பி1, பி2 மற்றும் சி என்ற அடிப்படையில் பல்வேறு நகரங்களைப் பிரித்து வைத்து இருக்கிறார்கள். நகர ஈட்டுப்படி, வாடகைப்படி ஆகியவை வழங்கப்படுகின்றன. ஒவ்வொரு பிரிவிற்கும் ஒரு விகிதம் நிர்ணயிக்கப்பட்டுள்ளது. மத்திய அரசு தற்போதுதான் மதுரை, கோவை ஆகிய நகரங்களை B2 நிலையில் இருந்து B1 நிலைக்கு உயர்த்தியிருக்கிறது. அந்த வகையில் மத்திய அரசு அங்குள்ள பணியாளர்களுக்கு நகர ஈட்டுப்படி, வாடகைப்படி ஆகியவற்றை மாற்றியமைத்து இருக்கிறது. ஆகவே, மத்திய அரசுப் பணியாளர்களுக்கு வழங்கப்படுகின்ற நகர ஈட்டுப்படி, வாடகைப்படி ஆகியவை குறித்து நாம் மத்திய அரசுக்கு எழுதிக்கேட்டு இருக்கிறோம். மத்திய அரசிடமிருநது அதற்கான பதில் வந்ததும் அதன் பேரில் மாநில அரசு தக்க நடவடிக்கை எடுக்கும்.

திரு. எம். ஆறுமுகம் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு இந்த நகரங்களை தரம் பிரிக்கிறது என்று அமைச்சர் அவர்கள் சொன்னார்கள். இப்போதுதான் மதுரை, கோவை ஆகிய நகரங்களுக்கு தகுதி உயர்வு அளிக்கப் கப்பட்டு இருப்பதாகச் சொன்னார்கள். மத்திய அரசு தற்போது அநதத் தகுதியை உயர்த்திக் கொடுத்து இருப்பதால், அரசாங்கம் அதைப்பற்றிப் பரிசீலிக்கிறது என்று சொன்னாலும், மதுரை, கோவை ஆகிய நகரங்கள் என்றைக்கு மாநகராட்சி அந்தஸ்த்துக்கு உயர்த்தப்பட்டனவோ, அந்தத் தேதியில் இருந்து அவர்களுக்கு நகர ஈட்டுப்படி, வாடகைப்படி உயர்த்திக் கொடுக்கப்படுமா ?

1983 பிப்ரவரி 7]

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவர் அவர்களே, அந்த நகரங்கள் மாநகராட்சியாக அறிவிக்கப்பட்ட தேதியில் இருந்து தருவது என்பது முடியாது. அது எப்போது பி2 நிலையில் இருந்து பி1 நிலைக்கு மத்திய அரசால் உயர்த்தப் பட்டதோ அந்தத் தேதியில் இருந்துதான் கணக்கிட வேண்டி வரும்.

திரு. என். எஸ். வி. சித்தன் : மாண்புமிகு பேரவைத் தலைவர் அவர்களே, மத்திய அரசு அந்த இரண்டு நகரங்களை எந்தத் தேதியில் பி2 நிலையில் இருந்து பி1 நிலைக்கு உயர்த்தியது என்பதை அறிய விரும்புகிறேன். அதைப்போலவே, இதனால் எவ்வளவு ரூபாய் அதிகம் செலவாகும் என்று அரசு எதிர்பார்க்கிறது என்பதையும் அறிய விரும்புகிறேன்.

மாண்புமிகு பேரவைத் தலைவர் : எந்தத் தேதியில் அது மாற்றம் செய்யப்பட்டது போன்ற விவரங்களை மாண்புமிகு உள்ளாட்சித் துறை அமைச்சரிடம் கேட்கவேண்டும்.

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : மாண்புமிகு தலைவர் அவர்களே, இது பற்றிய விவரம் என்னிடத்தில் இல்லை. அண்மையில் தான் பி2 நிலையில் இருந்து பி1 நிலைக்கு அவைகள் உயர்த்தப்பட்டன. மத்திய அரசு ஏ, பி1, பி2 மற்றும் சி பிரிவு நகரங்களில் பணியாற்றும் மத்திய அரசுப் பணியாளர்களுக்கு அளிக்கின்ற நகர ஈட்டுப் படி, வாடகைப்படி ஆகியவற்றைப் பற்றிய விவரங்களைக் கேட்டு இருக்கிறோம். அதிலே சிலபல மாற்றங்களை மத்திய அரசு செய்து இருக்கிறது. அது பற்றிய விவரங்களை மத்திய அரசிடம் கேட்டு இருக்கிறோம். மத்திய அரசிடமிருந்து அது பற்றிய விவரங்கள் வந்தபிறகு மாநில அரசு அதனுடைய அடிப் படையில் தக்க நடவடிக்கைகளை மேற்கொள்ளும்.

திரு. மா. சின்னராஜ் : தலைவரவர்களே, இப்படி நகரங் களுடைய அந்தஸ்தை உயர்த்தும் போது ஒவ்வொரு இலாகா விலும் ஒவ்வொரு தேதியிலிருந்து படிகளை உயர்த்திக் கொடுக் கின்ற நிலைமை இருக்கிறது. சில இலாக்காக்களில் அதைப் பெறுவது மிகவும் கடினமாக இருக்கிறது. ஆகவே, அரசு நகரங்களின் அந்தஸ்தை உயர்த்திய தேதியிலிருந்து எல்லாத் துறையினருக்கும் சம்பள உயர்வு அல்லது படி உயர்வு பொருந்தும் என்று பொதுவான உத்தரவை வழங்க முன்வருமா ?

மாண்புமிகு டாக்டர் இரா. நெடுஞ்செழியன் : தலைவரவர் களே, அது பற்றி நான் முதலிலேயே குறிப்பிட்டேன். விவரங்கள் மத்திய அரசிடம் இருந்து வந்தவுடனே கோவை, மதுரை மாநக ரங்களுக்கு படிகளை உயர்த்தி வழங்குவது பற்றி முடிவு செய்யப் படும். அப்படி முடிவு எடுக்கப்படும்போது மாண்புமிகு உறுப் பினர் அவர்கள் குறிப்பிடும் கருத்துக்கள் மனதிலே கொள்ளப் படும்.

TAMIL NADU LEGISLATIVE ASSEMBLY
வாய்மையே வெல்லும்
TRUTH ALONE TRIUMPHS